**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# The Tamil–Roman Trade Connection as a Pretext for Exploring Literary Relations

**Ajaisundar E S***,

*Ph.D Scholar, Special Centre for Tamil Studies, Jawaharlal Nehru University(JNU), New Delhi.*

*Correspondence: ajaisundares99@gmail.com

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** The trade relationship between Tamil Nadu and Rome dates back to antiquity and involved the exchange of goods such as pepper, pearls, gold, wine, and aromatic substances. Archaeological findings, including coins and pottery discovered in both regions, along with references in foreign travel accounts, attest to the extent of this commercial interaction. Tamil and Latin literary sources further reflect awareness of these exchanges. While economic exchange forms the basis of Tamil–Roman contact, trade relations often extend beyond commerce and foster cultural interaction. Literary references to foreign peoples and distant lands in both Tamil and Latin texts suggest a broader cultural engagement shaped by sustained contact. This article examines archaeological, historical, and literary evidence to explore the possibility that commercial exchange between Tamil Nadu and Rome also contributed to cultural and literary connections.

**Keywords:** Trade, Tamil, Rome, Latin, Yavanas, Arikamedu, Pearl.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# தமிழக ரோமானிய வணிக உறவு: இலக்கிய உறவைக் கண்டறிவதற்கான ஒரு முன்னீடு

[*]**அஜய்சுந்தர் இ. சு.,** முனைவர்பட்ட ஆய்வாளர், சிறப்புநிலைத் தமிழ்த்துறை, ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.

## 1. ஆய்வுச்சுருக்கம்

மிகவும் தொன்மையான வரலாற்றை உடையது தமிழக – ரோமானிய வணிக உறவு. மிளகு, முத்து, பொன், மது, வாசனைப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் இருநாடுகளுக்கும் ஏற்றுமதி இறக்குமதி ஆயின. அவை சார்ந்த பல்வேறு தொல்லியல் சான்றுகள் தமிழக நிலப்பரப்பிலும் அதற்கு வெளியிலும் கிடைத்துள்ளன. அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் இதற்கான சான்றுகளைத் தருகின்றன. இவையன்றி, தமிழ் மற்றும் இலத்தீன் இலக்கியங்களும் இருநாட்டு வணிகமும் சிறந்திருந்ததற்கான சான்றுகளைத் தருகின்றன. இவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது. இரு நாடுகளுக்கு இடையிலான வணிக உறவு எப்போதும் வணிக உறவாக மட்டும் இருந்துவிடுவதில்லை. அவை இலக்கியம் உள்ளிட்ட பண்பாட்டு உறவாகவும் பரிணமிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. இருநாட்டு இலக்கியங்களிலும் மற்ற நாட்டு மக்கள் பற்றிய குறிப்பு உள்ளதன்வழி அதை அறியலாம். இந்நோக்கத்தில் இலக்கியச் சான்றுகளை ஆராய்கிறது இக்கட்டுரை.

## 2. திறவுச்சொற்கள்: வணிகம், தமிழ், ரோம், இலத்தீன், யவனர், அரிக்கமேடு, முத்து

## 3. முன்னுரை

இலக்கியம் என்பது சமூகத்தின் விளைபொருள். அது சமூக இயங்கியலுடன் நெருங்கிய ஆனால் மறைமுகமான தொடர்புடையதாகும். இலக்கியம் என்பதும் பிற மேற்கட்டுமானங்களைப்போலப் பொருளாதாரம் எனும் அடிக்கட்டுமானத்தின் மேலேயே எழுப்பப்பட்டுள்ளது என்கிறது மார்க்சியம். இந்தப் பின்புலத்திலேயே வணிகத்தையும் பார்க்கவேண்டியுள்ளது. இத்தகைய வணிக உறவுகள் எப்போதும் பொருட்களை மாற்றிக்கொள்ளும் உறவாக மட்டும் இருந்ததில்லை. இரு வெவ்வேறு மொழிபேசும் சமூகங்கள் வணிகத்தின் காரணமாக ஊடாடத் தொடங்கும்போது அவற்றின் மொழிகள், பண்பாடுகள், நம்பிக்கைகள் ஆகியவற்றிலும் கொடுக்கல் வாங்கல் நிகழ்கின்றன.

## 4. ரோமானியரின் கடல் வணிகம்

பொது ஆண்டுக்கு முந்தைய சில நூற்றாண்டுகளாகவே ரோமானியரின் கடல்வாணிகம் மிகவும் சிறப்புற்றிருந்தது. பொ.ஆ.மு. முதல் நூற்றாண்டில் அவர்களது வணிகம் உச்சநிலையை அடைந்தது.

இக்காலத்தில் அவர்கள் நிலத்தின் வழியிலான உள்நாட்டு வணிகத்தில் சிறந்திருந்ததோடு கடல்வழியிலான அயல்நாட்டு வணிகத்திலும் வல்லமை பெற்றிருந்தனர். ரோமானியர் ஆப்பிரிக்கா, அரேபியா முதலான பல பகுதிகளுடன் மட்டுமில்லாமல் இந்தியத் துணைக்கண்டத்துடனும் கடல்வழி வணிகத்தில் ஈடுபட்டனர். ரோமானியப் பொருளாதாரத்திற்கு இந்திய வணிகம் தலையாய பங்களிப்பைச் செய்தது. அதிலும் குறிப்பாக இன்றைய கேரள, தமிழ்நாட்டுப் பகுதிகளை உள்ளடக்கிய பண்டைய தமிழகம் ரோமானியப் பொருளாதாரத்தை அறுதியிடுவதில் மிக முக்கியப் பங்கு செலுத்தியது. இங்கிருந்து அவர்கள் இறக்குமதி செய்த பல்வேறு பொருட்கள் ரோமானியச் சமூகத்தில் புதிய பல செல்நெறிகள் உருவாகக் காரணமாக அமைந்தன.

**4.1 . ரோமானியப் பொருளாதாரத்தில் வணிகத்தின் பங்கு**

ரோமானியக் குடியரசின் இறுதிக்காலமும் பேரரசின் தொடக்கக்காலமுமான பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நிலப்பரப்பு முழுவதும் பரந்துவிரிந்திருந்த ரோமானிய நாட்டின் பொருளாதார நிலைத்தன்மைக்கு உள்நாட்டு வணிகத்திற்கு அப்பாலும் விரிந்த பன்னாட்டு வணிகம் தேவையாக இருந்தது. அதற்குப் பேரரசும் மற்றொரு காரணமாக அமைந்தது. அதாவது, தொடர்ச்சியாக நிகழ்ந்துவந்த உள்நாட்டுப் போர்கள் முடிவுக்கு வருதல், நேரடியான ரோமானிய ஆட்சியின்கீழ் நடுதரைக்கடல் பகுதிகள் ஒன்றாக இணைக்கப்படுதல் ஆகியன ரோமானியப் பொருளாதாரத்தை மாற்றி அமைத்தன. மக்களின் சொத்துக்கள் கூடியமை விலைமதிப்புள்ள பொருட்களில் அவர்களின் மோகம் பரவக் காரணமாக அமைந்தது. இதன்வழி, இந்தியப் பெருங்கடல் வணிகத்தில் அவர்களின் ஈடுபாட்டைப் புரிந்துகொள்ளலாம். ரோமானியத் தொல்லியல் ஆய்வுகளில் கிடைக்கும் சான்றுகள் இதை உறுதிப்படுத்துகின்றன. பாம்ப்பேய்(Pompeii) எனுமிடத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் ரோமானியப் பெண்மணி ஒருவர் தங்கமும் முத்தும் உடைய அணிகலன்களை அணிந்துள்ளதாக ஒரு வீட்டின் சுவரொட்டுகல்(Tile) கிடைத்துள்ளதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்(Romanis 2). இந்தியப் பெருங்கடல் வணிகத்தில் இடர்கள் அதிகம் இருந்தாலும் அதை ரோமானியர் மேற்கொள்ளக் காரணம் அது அளித்த வருவாயே ஆகும். 'தனிநபர்கள், அரசு ஆகிய இருவருமே இந்த வணிகத்தால் பெருமளவு லாபமடைந்தனர்'(Romanis 2) எனும் கருத்து இவ்வணிகம் அளித்த வருவாயைப் புரிந்துகொள்ள உதவுகிறது. ரோம் பலநாடுகளுடனான வணிகத் தொடர்பைக் கொண்டிருந்தாலும் இந்தியப் பெருங்கடல் வணிகமே அதில் முக்கியக் கண்ணியாக இருந்தது எனலாம். குறிப்பாக, தமிழகத் துறைமுகங்களே ரோமானிய வணிகர்கள் வந்து போகும் முதன்மையான வணிக இடங்களாக இருந்தன.

**4.2 . வணிக உறவு குறித்து அம்பேத்கர்**

அம்பேத்கரின் பின்வரும் கருத்துகளைக் குறிப்பிடுவது இவ்விடத்தில் பொருத்தமானதாக அமையும்.

ரோமானிய ஏகாதிபத்தியத்தின் மேற்கவிகையின்கீழ் கிழக்கின் அமைதியான ஊடுவருல் இடைவிடாது இருந்து வந்தது. தத்துவவியல், வானூல், கணக்கியல், மருத்துவ இயல் முதலியவை ரோமாபுரிக்குக் கிழக்கு வழங்கிய நன்கொடைகளாகும். ரோமானியர்களின் நடைமுறை அனுபவத் திறனுக்கு மாறுபட்ட முறையில் அமைந்த கீழ்த்திசையாளர்களின் ஆழ்புலமை அவர்களது வாணிகச் சரக்காக மிளிர்ந்தது. இதனால் ரோமாபுரியின் அரசவையை கீழை நாடுகளைச் சேர்ந்த புகர் ஒளி சான்ற அறிஞர் பெருமக்கள் அணிசெய்யும் அருங்காட்சியைச் சர்வசாதாரணமாகக் காணமுடிந்தது.

ரோமை கான்ஸ்டன்டைன் அரசியல் அதிகாரத்தின் கேந்திரமாக, மையமாக ஆக்குவதற்கு முன்பேகூட தொழில் வளர்ச்சிக்கும், செல்வ வளத்துக்கும், தொழில்நுட்பத் திறத்திற்கும் தரத்துக்கும், கலைப் படைப்புகளுக்கும் அதேபோல் அறிவுத் தாகத்துக்கும், விஞ்ஞான மேம்பாட்டுக்கும் கிழக்கையே அதிலும் குறிப்பாக தொன்மை வாய்ந்த நாகரிகத்தின் நிலைக்களமாகத் திகழும் இந்த நாடுகளையே நாம் சார்ந்திருக்க வேண்டியிருந்தது, நம்பியிருக்க வேண்டியிருந்தது. இன்னும் சொல்லப்போனால் அறிவுத்துறையின் அனைத்துக் கிளைகளிலும் கீழை உலகின் தாக்கம் கோலோச்சிற்று என்றே கூறவேண்டும்.(அம்பேத்கர், 3-4)

இங்கு, கீழைநாடுகள் என்பது ரோமானிய நாட்டிற்குக் கிழக்கில் உள்ள பல நாடுகளையும் பொதுவாகக் குறிக்கிறது என்றாலும் வணிகம்வழி நடைபெற்ற பண்பாட்டுப் பரிமாற்றங்கள் என்பதே இங்கு அடிப்படைச் செய்தியாகும். பண்டைய உலகின் பெரும் பொருளாதாரச் சக்திகளாகத் திகழ்ந்த தமிழக - ரோமானிய நாடுகளின் வணிக உறவின்வழியாக அவற்றின் மொழிகளுக்கிடையிலான இலக்கிய உறவு குறித்துச் சிந்திக்க இயலுமா என ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## 5. தமிழ் இலக்கியச் சான்றுகள்

தமிழகத்தின் பல்வேறு உற்பத்தி முறைகளையும் காட்சிப்படுத்தியுள்ள சங்க இலக்கியத்தின்வழி, வணிகத்திலும் பழந்தமிழர்கள் சிறப்புற்றிருந்ததை அறிய முடிகிறது. கால வேறுபாடின்றி அகப் பாடல்களிலும் புறப் பாடல்களிலும் வணிகம் குறித்த தகவல்கள் விரவியிருக்கின்றன. குறிப்பாக, ரோமானிய வணிகர்களுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பை யவனர்கள் எனும் சொல் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளதன்வழி அறியலாம்.

### 5.1 . யவனர்கள்

சங்க இலக்கியச் சான்றுகளை நோக்கும்முன், யவனர்கள் எனும் சொல் குறித்த தெளிவு தேவையானதாகும். இச்சொல் ‘பொதுவாகக் கிரேக்கர்களைக் குறிப்பதாகவே சமஸ்கிருத, பிராகிருத, பாலி இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு மாறாகச் சங்க இலக்கியத்தில் யவனர்கள் எனும் சொல் ரோமானிய வணிகர்களைக் குறிப்பதாகவே இடம்பெற்றுள்ளது’(Ray, 313). பழந்தமிழர்கள் தம்முடன் வணிகத் தொடர்புகொண்ட மேற்கத்திய நாட்டினர் அனைவரையும் இச்சொல்லால் அழைத்தனர் என்றும் சிலர் கருதுகின்றனர். பண்டைய இந்தியாவில் யவனர்கள் எனும் கட்டுரையில் மேற்குறிப்பிட்ட கருத்தைக் கூறும் ரே எனும் ஆய்வாளர் வட இந்தியாவில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் பலவும் கிரேக்கர்களுடன் தொடர்புடையதாக இருப்பதை விரிவாக விளக்கியுள்ளார். அதேநேரத்தில், சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பொன், மிளகு, மது ஆகியவற்றுடன் தொடர்புடையவராக ரோமானியரே இருப்பதால் யவனர்கள் என்போர் ரோமானியரே என்கிறார் அவர். இதற்குத் தொல்பொருட்களும் நாணயங்களும் சான்று பகர்கின்றன. இவ்வாறு, கிடைத்துள்ள சான்றுகள் பலவும் தமிழகத்துடன் வணிக உறவுகொண்ட மேலைநாட்டினரில் ரோமானியரே முதலிடத்தில் இருந்தமையையும் யவனர்கள் எனும் சொல்லுடன் அவர்களே பெரும்பாலும் தொடர்புறுத்தப்படுவதையுமே காட்டுகின்றன என்பதால் யவனர்கள் என்பது தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை ரோமானியரே எனலாம்.

### 5.2 . யவனர்களைக் குறிப்பிடும் சங்க இலக்கிய வரிகள்

யவனர்களுடன் கொண்டிருந்த வணிக உறவைக் காட்டும் பாடல்களுள் முதலாவதாக,

“சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ” (அகம். 149)

எனும் அகநானூற்றின் வரிகளைக் குறிப்பிடலாம். பாண்டிய மன்னன் ஒருவன் சேர மன்னனின் முசிறி துறைமுகத்தைக் கைப்பற்றுவதைக் குறிப்பிடும் இப்பாடல், யவனர்களின் கப்பல்கள் தமிழகக் கடற்கரையில் மேற்கொண்ட வணிகச் செயல்பாட்டை விவரிக்கிறது.

சினமிகு தானை வானவன் குடகடற்
பொலந்தரு நாவாய் ஓட்டிய (புறம். 126)
மனைக்குவைஇயகறிமூடையாற்
கலிச்சும்மைய கரைகலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து (புறம். 343)

மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்த கப்பல்கள் பொன்னையும் வெள்ளியையும் தமிழக நிலத்தில் பெருமளவில் கொண்டுவந்து சேர்த்து மிளகை அதிகளவில் கொள்முதல் செய்துள்ளமைக்கு இத்தகைய வரிகள் சான்றுகளாய் அமைகின்றன.

இரவலர்க் கருங்கல மருகா தீயா

யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்

பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்

ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து (புறம் 56)

யவனர்களின் பொன், வெள்ளி ஆகியவற்றிற்கு மட்டுமின்றி அவர்களது நாட்டு மதுவகைகளுக்கும் தமிழக மண்ணில் வரவேற்பு இருந்துள்ளமை இப்பாடல்வழித் தெரிகிறது. இதையே அரிக்கமேடு போன்ற இடங்களில் கிடைத்த தொல்லியல் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன.

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை'(நெடு. 101)

'வேள்வி தூணத்து அசைஇ யவனர்

ஓதிம விளக்கின் உயர்மிசை கொண்ட' (பெரும். 316-317)

ஆகிய வரிகள் யவனர்கள் பாவை விளக்கு போன்ற தமது கலைப்பொருட்களையும் இங்கு விற்றுள்ளமையைத் தெளிவுபடுத்துகின்றன.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை

மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து

வலி புணர் யாக்கை வன்கண் யவனர்

புலித்தொடர் விட்ட புனை மாண் நல் இல்

திருமணி விளக்கங் காட்டித் திண்ஞாண் (முல். 61-65)

இவ்வரிகள் யவனர்களின் கலைத்திறனை விளக்குவதோடு அவர்களின் தோற்றத்தையும் விளக்குவனவாக அமைகின்றன.

**5.3 . தமிழகக் கடற்கரை நகரங்கள்**

தமிழகக் கடற்கரை நகரங்கள் வணிக நோக்கில் சிறப்புற்றிருந்தமையைப் பல சங்க இலக்கிய வரிகளும் விளக்குவதைக் காணமுடிகிறது. வேறு சொற்களில் சொல்வதானால், வணிகம் பல தமிழகக் கடற்கரை நகரங்கள் உருவாக வித்திட்டன எனலாம். எடுத்துக்காட்டாக, உறையூர் சோழர்களின் தலைநகரமாக இருந்தநிலையில் அக்காலத்தில் பெருகிய வணிகத் தேவையின் காரணமாகக் கரிகாலன் காலத்தில் காவிரிபூம்பட்டினம் சோழர்களின் தலைநகரமாக்கப்பட்டு வளர்ச்சியடைந்ததை அறிய முடிகிறது(உலகநாத பிள்ளை, 42). இவ்வாறே, மேலே சுட்டப்பட்ட

பாடலில் முசிறியைச் சேரர்களிடமிருந்து கைப்பற்றப் பாண்டியர்கள் மேற்கொண்ட முயற்சியை அதன் வணிகச் சிறப்பை மையமிட்டே புரிந்துகொள்ள வேண்டும்.

### 5.4 . வணிகப் புலவர்கள்

சங்க இலக்கியத்தை மையமிட்டு, வணிக உறவின்வழியாக இலக்கிய உறவு எனும் கருதுகோளைக் கொண்டு ஆராயும்போது மற்றொரு பண்புக்கூறு முக்கியமானதாகும். சங்க காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் படிப்பறிவு அதிகமாக இருந்ததுடன் வணிகக் குலத்தைச் சார்ந்த பல புலவர்கள் இருந்துள்ளமையையும் அறியமுடிகிறது. முல்லைப்பாட்டை எழுதிய நப்பூதனார் மட்டுமின்றி அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்ட வாணிகள் இளநத்தத்தனார், உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தங்கொற்றனார் முதலிய பலரும் இத்தகையவராக இருந்துள்ளனர். வணிகர்கள் எனக் குறிக்கப்படுவதால் அவர்கள் தமது இலக்கியச் செயல்பாடுகளை வணிகத்துடன் இணைத்துள்ளனர் எனக் கருதலாம்(முகுந்த், 2015, 41-42).

## 6. இலத்தின் இலக்கியத்தில் இந்திய வணிகம்

இலத்தீன் இலக்கியத்தில் இந்திய வணிகம் குறித்த நேரடியான செய்திகள் இல்லை. அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகள் வணிகம் குறித்த நேரடியான தகவல்களைத் தர, இலத்தீன் இலக்கியம் சில மறைமுகமான குறிப்புகளைத் தருகின்றன. அதாவது, அக்காதல் பாடல்களில் இந்திய முத்துகள் குறித்தும் இந்தியாவிலிருந்து கிடைத்த மணிக்கற்கள் குறித்தும் ஆங்காங்கே இடம்பெறும் குறிப்புகள் உள்ளன. இக்குறிப்புகள் தமிழக – ரோமானிய வணிகம் குறித்து ஆராயும் பெரும்பாலான ஆய்வாளர்களால் கருத்திற்கொள்ளப்படுவதில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## 7. வணிகம் பற்றிய பிற சான்றுகள்

இலக்கியச் சான்றுகளுடன் ஒத்துப்போவனவாகப் பல்வேறு தொல்லியல் தரவுகளும் கிடைத்துள்ளன. தமிழக நிலப்பரப்பு முழுவதும் கிடைக்கும் பல்வேறு ரோமானிய நாணயங்கள், அரிக்கமேடு முதலிய இடங்களில் கிடைத்துள்ள பானையோடு, மதுச்சாடிகள் உள்ளிட்ட தொல்லியல் சான்றுகள் ஆகியன இருநாடுகளுக்கு இடையிலான வணிகத்தின் தன்மையை உணர்த்துவனவாக உள்ளன. இவையன்றி ரோம நாட்டுத் துறைமுகங்களிலும் தமிழி எழுத்துப் பொறித்த தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. தற்போது எகிப்தின் மன்னர்ப் பள்ளத்தாக்கில் கிடைத்துள்ள ‘சிகை கொற்றன்’ எனும் எழுத்துப்பொறிப்புகளைப் போன்ற சான்றுகளும்கூட இதற்கு வலுசேர்க்கின்றன. பிளைனி, ஸ்ட்ரபோ உள்ளிட்ட அயல்நாட்டார் குறிப்புகளும் ப்யூட்டிங்கர் வரைபடம், அலெக்சாண்டிரியா-முசிறில் வணிக ஒப்பந்தம் முதலிய பிற சான்றுகளும் வணிக உறவின் ஆழத்தைத் தெரிவிக்கின்றன.

## 8. முடிவுரை

இவ்வாறாக, தமிழக ரோமானிய வணிகம் மிகவும் சிறப்புற்றிருந்ததை மேற்கூறிய சான்றுகள்வழி அறியமுடிந்தது. நகரங்கள் வளர்ச்சி பெற்றிருந்ததோடு பல பொருட்களும் ஏற்றுமதி இறக்குமதியாயின. யவனர்கள் இங்குத் தங்கியிருந்ததோடு வணிகர், கலைஞர், காவலர் போன்ற பலநிலைகளில் இருந்துள்ளனர் என்பது சான்றுகள் வழித் தெரிகிறது. வணிக உறவுகளின்வழி நிகழ்ந்த சில பண்பாட்டு ஊடாட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்டன. இரண்டு இலக்கியங்களும் வணிகம் பற்றிக் குறிப்பிடுகின்றன. வணிகக் குலத்திலிருந்தும் கவிஞர்கள் பாடல்கள் இயற்றியுள்ளனர். இவையாவும் வணிக உறவின் தொடர்ச்சியாக இலக்கிய உறவு நிகழ்ந்திருக்கலாம் எனும் சிந்தனைக்கு அடிப்படையாகின்றன.

**துணைபுரிந்தவை**


[1]. Mukund, Kanakalatha. *The World of the Tamil Merchant.* Gurgaon: Portfolio, 2015.

[2]. Ray, Himanshu P. “The Yavana Presence in Ancient India”. *Journal of the Economic and Social History of the Orient*, Vol. 31, No.3, pp. 311-325, 1988.

[3]. Warmington, E H. *The Commerce between the Roman Empire and India*. 2nd ed., Vikas Publishing House, 1974.

[4]. அம்பேத்கர், பி. ஆர். “பண்டைய வாணிகம்”, *டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் பேச்சும் எழுத்தும்*, புதுதில்லி டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன், 2001.

[5]. சாமிநாதையர், உ.வே. *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்*. சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம், 1918.

[6]. சாமிநாதையர், உ.வே. *புறநானூறு மூலமும் உரையும்.* சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம், 1935.

[7]. ராஜன், கா. *தொல்லியல் நோக்கில் சங்ககாலம்.* இரண்டாம் பதிப்பு, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2010.

[8]. வேங்கடசாமி நாட்டார், ந.மு. *அகநானூறு.* திருநெல்வேலி: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1946.